**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**

# IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary register | : | Sessions Case No. 58 of 2020 |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | Prosecution : PW- 1 |
| | | Defence : |
| | : | Court : |

Name : Murugan

Father's Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of September 2022.**

முதல் விசாரணை:

நான் தற்போது புட்டிரெட்டிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். தற்போது கடை எண். 2985 டாஸ்மாக் கடையில் உதவி விற்பணையாளராக பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பு வெப்பாலம்பட்டி அருகேயுள்ள கடை எண்.2936 ல் உதவி விற்பணையாளராக பணி செய்து வந்தேன். அந்த கடையில் நான், கோவிந்தராஜ், ஆனந்த், இளையராஜா மற்றும் மேற்பார்வையாளர் சுபாஷ், சிவக்குமார் ஆகியோர் பணி செய்து வந்தோம். கடந்த 15.12.2018 ம் தேதி இரவு சுமார் 10.00 மணியளவில் நானும், ஆனந்த் என்பவரும் கடையை மடிவிட்டு ஆனந்தனுக்கு சொந்தமான ஆக்டிவா இருசக்கர வாகனத்தில் அனுமந்தீர்த்தத்தில் உள்ள கௌரி துணிக்கடைக்கு மேல் தனியாக அரை எடுத்து தங்கியுள்ளோம் அந்த இடத்திற்கு நாங்கள் சென்றோம். நாங்கள் கடையை மூடிவிட்டு கடை சாவி, ரூம் சாவி, அன்று விற்பனையான நுமார் ரூ.300000/-பணம், பில் புக், சிட்டா, பார்ம்-5 ஆகியவற்றை இருசக்கர வாகனத்தின் முன்புறத்தில் வைத்துக்கொண்டு ஆனந்தன் இருசக்கர வாகனத்தை ஓட்ட நான் பின்னால் அமர்ந்து வந்தேன். எங்கள் கடை சேலம் மெயின்ரோட்லிருந்து கிழக்கு திசையில் சுமார் 1 கி.மீ தூரம் தள்ளி உள்ளே அமைந்துள்ளுது. நாங்கள் கடையில் இருந்து கிளம்பி மெயின் ரோட்டிறுகு வந்தபோது அந்த இடத்தில் கிழக்கு பக்கம் கல்லின் மீது இரண்டு நபர்கள் உட்கார்ந்திருநதனர். ஒரு இருசக்கர வாகனம் பக்கத்தில் நின்றுக்கொண்டிருந்தது. நாங்கள் மெயின் ரோட்டிற்கு வந்து அனுமந்தீர்த்தம் நோக்கி தெற்கு திசையில் சென்றுக்கொண்டிருந்தபோது எங்களுக்கு பின்னால் ஒரு இருசக்கர வாகனம் தொடர்ந்து வந்துக்கொண்டிருந்தது. அதனால் நாங்கள் சற்று வேகம் எடுத்து முன்னால் சென்றோம். வித்யா மந்திர் கல்வியல் கல்லூரி விடுதி தாண்டி ரோட்டின் வளைவில் டமார் என ஒரு சத்தம் கேட்டது. நான் பார்த்தபோது என் காதில் ரத்தம் வந்தது. எங்கள் இருசக்கர வாகனமும் நிலை தடுமாறி மண் ரோட்டில் கீழே விழுந்துவிட்டது. எழுந்து பார்த்தபோது ஆனந்தன் வலது கை அக்குள் பகுதி சுட்டுவிட்டதாக சொல்லி அவர் கத்திக்கொண்டே ஓடினார் அவர் அணிந்திருந்த டி-சர்ட் எறிந்துவிட்டதாக சொல்லிக்கொண்டே ஓடினார். நான் கீழே விழுந்த பணப்பையை எடுக்கலாம் என முற்பட்டபோது ஒரு நபர் துப்பாக்கியை நீட்டிக்கொண்டே வந்தார்.நான் பணப்பையை எடுக்க முயற்சித்தபோது துப்பாக்கியை திருப்பி அதன் பின்பகுதியால் எனது வலது காதின் பக்கமே அடித்துவிட்டு பணப்பையை பிடுங்கிக்கொண்டார். அவ்வாறு என்னை துப்பாக்கியால் அடித்த நபரை என்னால் அடையாளம் காட்ட முடியும். சாட்சி நீதிமன்றத்தில் முதலாவதாக நின்றுக்கொண்டிருந்த எதிரி வெங்கடேசன் என்பவரை அருகில் சென்று பார்த்து தொட்டு அடையாளம் காட்டினார். என்னையும், ஆனந்தன் என்பவரையும் அடிக்க மற்றும் சுட்ட பயன்படுத்திய துப்பாக்கி என்னால் பார்த்து அடையாளம் சொல்ல முடியும். அந்த துப்பாக்கித்தான் நீதிமன்றத்தில் உள்ளது. சாட்சி நுதிமட்னறத்திலுள்ள துப்பாக்கியை பார்த்து இவ்வளவு நீளமுள்ள துப்பாக்கி என கூறுகிறார். மேற்படி துப்பாக்கி தான் அவரால் பயன்படுத்தப்பட்டதா என என்னால் சொல்ல இயலாது. அதன் பின்பு நான் ரோட்டின் கிழபுறம் உள்ள செடியின் மறைவில் உட்கார்ந்துக்கொண்டேன். அங்கிருந்து அனுமந்தீர்த்தம் சேர்ந்த முன்னால் பஞ்சாயத்து தலைவர் மாரியப்பனுக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். நான் தகவல் தெரவித்து சுமார் கால் மணி நேரத்தில் மாரியப்பனுடம் 2, 3 நபர்கள் வந்தனர். சம்பவம் நடைபெற்றபோது இரவு சுமார் 10.15 மணியிருக்கும். அதன் பிறகு ஆம்புலன்சிற்கு மாரியப்பன் தகவல் சொல்லி வந்தது. அதன் பிறகு ஆம்புலன்ஸில் ஏறி நான், ஆனந்தன் மற்றும் கடை சூப்பர்வைசர் ஆகியோர் ஊத்ததங்கரை அரசு மருத்துவமணைக்கு வந்தோம். ஆனந்தன் பி.எட் கல்லூரி பக்கம் சம்பவத்திற்கு பையந்து ஒலிந்துக்கொண்டிருந்தார். அவரையும் மழைத்துக்கொண்டு தான் அரசு மருத்துவமணைக்கு வந்தோம். ஊத்தங்கரை அரசு மருத்துவமணையில்

முதலுதவி சிகிச்சை பெற்றுக்கொண்டு தருமபுரி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக சென்றோம். எங்களுடன் சிவக்குமார், இளையராஜா, மாரியப்பன் மற்றும் வந்தனர். என்னை தருமபுரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்திதும் ஆனந்தனை சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். விடியற்காலை சுமார் 6.15 மணியளவில் ஊத்தங்கரை காவல் ஆய்வாளர் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார். ஆய்வாளர் விசாரித்தபோது நான் வாய்மொழியாக சொன்னதை ஆய்வாளர் எழுதிக்கொண்டார். பின்பு அதை எனக்கு படித்துக்காண்பித்தார். அவர் படித்து காண்பித்து சரி என்பதால் நான் கையொப்பம் செய்தேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்கு விசாரணை **1** மற்றும் **2** எதிரிகள் **த** ரப்பில்:</u>

**கடை** எண்.2936 ல் சுமார் 7 ஆண்டுகளாக பணி செய்து வந்தேன். அந்த கடையில் நாங்கள் மொத்தம் 4 பேர் பணி செய்கிறோம். 3 விற்பணையாளர்கள் மற்றும் 1 உதவியாளர், காசாளர் என தனியாக யாருமில்லை. கடையின் நடவடிக்கைகளுக்கு அன்றைய தேதியில் விற்பணையாளர்கள் ஆனந்தன் மற்றும் கோவிந்தராஜ் பொறுப்பு என்றால் சரிதான். ஒவ்வொரு நாளும் அன்று வசூல் ஆகும் தொகையை நான், ஆனந்தன் மற்றும் கோவிந்தராஜ் ஆகிய மூவரும் சேர்ந்து தான் எடுத்துச்செல்வோம் என்றால் சரிதான். கோவிந்தராஜுக்கு அவ்வப்பபோது வலிப்பு ஏற்படுவதாலும் அவர் மாத்திரை எடுத்துக்கொள்வதாலும் இரவு 8.00 மணிக்கு அவர் கடையை விட்டு சென்றுவிடுவார். நான், ஆனந்தன், இளையராஜா ஆகியோர் கடையில் இருப்போம். நானும் ஆனந்தன் மட்டும்தான் கடையில் இருப்போம். பொதுவாக கோவிந்தராஜ் 8.00 மணிக்கு சென்றுவிடுவதால் எங்களுடன் சூப்பர்வைசர் கடையில் சேர்ந்து கொள்வாரா என்றால் இல்லை. இளையராஜா எங்களுடன் எப்போதும் இருப்பார் சம்பவ தினத்தன்று பெரிய காரியம் என சொல்லிவிட்டு சென்றுவிட்டதால் அன்றைய தினம் அவர் எங்களுடன் இல்லை. மதுக்கடையில் விற்பனை தொகையை என்னமாட்டோம் ரூமிற்கு வந்து தான் இருப்பு எண்ணிக்கை விபரத்தை வைத்து வசூல் தொகையை கணக்கிடுவோம். டாஸ்மாக் கடையை இரவு 10.00 மணிக்கு சரியாக மூடிவிடுவோம். வியாபாரத்தை நீட்டிப்பு செய்யமாட்டோம். அனுமந்தீர்த்தம் ரோட்டிற்கு எப்போது வந்தோம் என்றால் அப்போது நேரம் பார்க்கவ்லலை எங்களை சுட்ட போது 10.15 மணியிருக்கும. எத்தனை கி.மீ தூரம் இருசக்கர வாகனத்தில் எங்களை பின் தொடர்ந்தார்கள் என்றால் நான் திரும்பி ப்பார்க்கவில்லை ஆனால் லைட் வெளிச்சத்தின் அடிப்படையில் அவர்கள் பின் தொடர்வதை தெரிந்துக்கொண்டோம். கடைசி வரை பின்னால் வரும் நபர்களை பார்க்கவில்லை என்றால் சரிதான். என்னை சுட்டதாக சொல்வது எங்கள் இருசக்கர வாகனத்தின் பின் புறத்திலிருந்து தான் சுட்டார்கள் என சொல்கிறேன் என்றால் சரிதான். சுட்ட சத்தம் கேட்டு நாங்கள் வாகனத்திலிருந்து கீழே வழுந்துவிட்டோம் அதன் பிறகு தான் எங்களுக்கு ரத்தம் வருவதை தெரிந்துக்கொண்டேன். எங்களை சுட்டதாக சொல்லும் பகுதி இருட்டு பாதைப்பகுதி என்றால் சரிதான். எனக்கு வலது காது பகுதியில் ஏற்பட்ட காயம் துப்பாக்கி சுட்டதால் ஏற்பட்ட காயமா அல்லது துப்பாக்கியின் பின் புறத்தில் என்னை அடித்ததால் என்றால் சுட்டதால் ஏற்பட்ட காயம். மருத்துவர் என்னை மருத்துவமணையில் விசாரித்தபோது காதில் ஏற்பட்ட காயம் சுட்டதால் ஏற்பட்ட காயம் தான் என்று தெரிவித்தேன். துப்பாக்கி பின்புறத்தில் எனக்கு கண்ணத்தில் அடித்த காயம் குறித்து நான் மருத்துவரிடம் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். அடுத்த நாள் காலை 6.00 மணிக்கு போலீசார் என்னிடம் வாக்குமூலம் பெற்றபோது தான சம்பவம் குறித்து தெரிந்துக்கொண்டார்களா என்றால் அதற்கு முன்பும் தெரிந்துக்கொண்டிருக்கலாம். நான் கீழே விழுந்தபோது எதிரி அங்கு எவ்வளவு நேரம் இருந்தார் என்றால் சுமார் 2, 3 நிமிடங்கள் பை எடுத்தவுடன் அங்கிருந்து சென்றுவிட்டார். நாங்கள் வண்டியில்

சென்றுக்கொண்டிருந்ததால் எங்களுக்கு பின்னால் வண்டியில் வந்தவர்கள் எவ்வளவு அடி தூரத்திலிருந்து சுட்டார்கள் என்றுஎன்னால் சொல்ல இயலாது. நான் திரும்பி பார்த்திருந்தால் தான் என்னால் தூரத்தை சொல்ல முடியும். ஆனந்தன் என்னை விட உயரமாக இருப்பார். நான் குள்ளமாக இருப்பேன். அவர் போலீசுக்கு தகுதியான உயரத்துடன் இருப்பார். நான் பின்புறம் அமர்ந்திருந்த இருக்கை உயரமானது என்றால் சரியல்ல அது சமமான நிலையில் தான் உள்ளது. துப்பாக்கியால் சுட்டது எத்தனை குண்டுகள் வெளியேற்றப்பட்டது என என்னால் சொல்ல இயலாது. எனக்கு காதில் அடிப்பட்ட அதே சூல்நிலையல் ஆனந்தனுக்கு அக்குள் பகுதியில் காயம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்றும் என்னை துப்பாக்கியால் சுட்டதால் காதில் காயம் ஏற்பட்டதாக சொல்வது தவறு என்றால் சரியில்ல. ஆனந்தன் அவரை சுட்டவுடன் தன்னை சுட்டுவிட்டார்கள் என சொல்லிக்கொண்டே கல்லூரி விடுதி பக்கம் சென்றுவிட்டார். ஆம்புலன்ஸ் வந்த பிறகு தான் நான் ஆனந்தனை மீண்டும் பார்த்தேன். ஆம்புலன்ஸ் எவ்வளவு நேரம் களித்து வந்தது என என்னால் காலம் உறுதியாக சொல்ல முடியாது. ஆனந்தன் அணிந்திருந்த டி-சர்டின் வலது கை பகுதி எரிந்த நிலையில் இருந்தது. நான் பார்த்த நிலையில் அவ்வாறு தான் இருந்ததா என்றால் சுட்டபோது தான் நான் அவரை பார்த்தேன். ஆம்புலன்ஸில் ஆனந்தன் ஏறிய போது அவர் டி-சர்ட் அணிந்திருக்கவில்லை உள்பனியனுடன் இருந்தார். டி-சர்ட் எரிந்ததால் களட்டிவிட்டதாக கூறினார். டி-சரட்டை ஆனந்தன் கையில் எடுத்து வந்தார். அதை நான் பார்த்தேன். டி-சர்ட்டில் ரத்தக்கரை இருந்தது. எதிரி பணம் கொள்ளையடித்தாக சொல்வது பொய் என்றும போலீசார் தயார் செய்த வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் மீது சந்தேகத்தின் பெயரில் காவல் ஆய்வாளர் வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. கடையின் சிட்டா புத்தகம், சாவி ஆகியவற்றை குறித்து போலீசார் விசாரித்தார்களா என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. போலீசார் எங்களிடம் பணமோ, சாவியோ, புத்தகமோ எங்களிடம் இதுவரை ஒப்படைக்கவில்லை. நான் தருமபுரி அரசு மருத்துவமனையில் 10 நாட்கள் தங்கி சிகிச்சை எடுத்துக்கொண்டேன்.

குறுக்கு விசாரணை **3**ம் எதிரி தரப்பில்:

1 மற்றும் 2 எதிரிகளின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்ளபட்டதாக தெரிவிக்கப்பட்டது.

மறுவிசாரணை: இல்லை

**ஒம்/-**

**திரு.எம்.அஷ்பாக் அஹமத், பி.ஏ.,பி.எல்.,**
**உதவி அமர்வு நீதிபதி,**
**ஊத்தங்கரை.**